**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்**

**முன்னிலை : திருமதி.எ.சுவேதா,** B.B.A., L.L.B (Hons)

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**சிதம்பரம்.**

**2026 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 16-ஆம் நாள் செவ்வாய்க்கிழமை**

**அசல் வழக்கு 274/2012 ல் இடைமனு எண். 30/2026**

முத்துமாணிக்க நாடார்

அறக்கட்டளைக்காக அதன் பரம்பரை

அறங்காவலர் T.C.முத்துராஜ் ..........மனுதாரர்/வாதி

/எதிர்/

1. சேதுஅம்மாள் (இறந்தார்)

2. வேலாயுதம்

3.காந்திமதி

4. ராஜாமணி

5. வேம்பு

6. நெடுஞ்செழியன்

7. துரை (எ) கலியமூர்த்தி

8. மேகநாதன்

9. லெஷ்மி

10. கவியரசன்

11. சந்தியா

12. சங்கீதா

13. குமார்

14. ரவி

15.கோமதி

16. மாலதி

17. சந்திரா

18. சுரேஷ்

19. சுமித்ரா

20. கல்பனா ...எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இந்த இடைக்கால மனு என் முன்னர் கடந்த 01.04.2021ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திருமதி.ஜி. விஜயலட்சுமி, அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் இறந்தும் 4 முதல் 8 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.அ.சம்மந்தம் அவர்கள் ஆஜராகியும் மற்ற எதிர்மனுதாரர்கள் தரப்பில் நீதிமன்ற வருகையின்மையால் தோன்றாதரப்பினாக்கப்பட்டும், இருதரப்பு வாதுரைகளைக் கேட்டறிந்தும், இதுநாள் வரை என்னுடைய பரிசீலனையின் கீழ் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்ககும்....

## உத்தரவு

மனுதாரர்கள் தரப்பில், இறந்த 4 ஆம் பிரதிவாதிக்கு 17 முதல் 20 வரையான எதிர்மனுதாரர்களை வாரிசுதாரர்களாக அங்கீகாரம் செய்து கொண்டும் முறையே அசல் வழக்கில் 17 முதல் 20 பிரதிவாதிகளாக சேர்த்துக் கொண்டு வழக்கை மேல்நடத்த உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 22 விதி 4ன் கீழ் தாக்கல் செய்த மனு

**2. மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம் :**

இம்மனுவில் மனுதாரர் அசல் வழக்கில் வாதி என்றும் இந்த எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கில் பிரதிவாதிகள் என்றும் இந்த வழக்கில் தாவா சொத்து தங்களுக்கு பாத்தியம் என எதிர்மனுதாரர்கள் சட்டத்திற்கும், உண்மைக்கும் புறம்பாக ஆவணங்கள் ஏற்படுத்தி, தெரிவித்து வருவதால் வழக்கை விளம்புகை பரிகாரம் உள்ளிட்ட நிவாரணங்கள் கோரி, வாதியான மனுதாரரால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் வழக்கில் மனுதாரர் உரிமையினை நிலைநாட்டும் வகையில் வாதியாகிய மனுதாரரால் ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டு உள்ளது என்றும் அதில் இந்த எதிர்மனுதாரர்களும் வழக்கறிஞர் வைத்து கட்சி செய்து வருகிறார்கள். இந்நிலையில் வழக்கு நிலுவையில் இருக்கும் போது இந்த 4 ஆம் எதிர்மனுதாரர் ராமசாமி கடந்த 23.01.2026 அன்று கடந்த இறந்து விட்டதாகவும் இறந்த 4 ஆம் பிரதிவாதிக்கு 17 ம் எதிர்மனுதாரர் மனைவி மற்றும் 18,19, 20 எதிர்மனுதாரர்கள் முறையே மகன் மகள்கள் ஆவர் என்றும் இவர்களை தவிர வேறு வாரிசுகள் யாரும் இல்லை என்றும் இவர்கள்தான் இறந்த நான்காம் பிரதிவாதிக்கு சட்டப்படியான வாரிசுதாரர்கள் என்றும் இறந்த 4 ஆம் பிரதிவாதிக்கு இவ்வழக்கில் ஏற்படக் கூடிய லாபநஷ்டங்களில் பங்கு கொள்ளவும் வழக்கை தொடர்ந்து நடத்தவும் உரிமை உண்டு என்றும் எனவே இறந்த 4 ஆம் பிரதிவாதிக்கு முதல் எதிர்மனுதாரர்களை

வாரிசுதாரர்களாக அங்கீகாரம் செய்து கொண்டும் முறையே அசல் வழக்கில் 17 முதல் 20 பிரதிவாதிகளாக சேர்த்துக் கொண்டும் மேல் உத்தரவு செய்ய வேண்டி இருக்கிறது என்றும் அப்படிக்கு இல்லாவிடில் மனுதாரருக்கு பெருத்த கஷ்டமும் நஷ்டமும் ஏற்பட்டுவிடும் என்றும் இறந்த 4 ஆம் பிரதிவாதிக்கு 17 முதல் 20 வரையான எதிர்மனுதாரர்களை வாரிசுதாரர்களாக அங்கீகாரம் செய்து கொண்டும் முறையே அசல் வழக்கில் 17 முதல் 20 பிரதிவாதிகளாக சேர்த்துக் கொண்டும் மேல் நடத்த இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. 2,6,7,8-ம் எதிர்மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம் :**

மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு நிலைக்கத்தக்கதல்ல, தள்ளுபடிக்கு உரியது என்றும், வழக்கு சொத்து தொடர்பாக இந்த எதிர்மனுதாரர்கள் உண்மைக்கு புறம்பாக ஆவணங்களை ஏற்படுத்தியுள்ளதாக கூறியுள்ளது தவறாகும் என்றும், இந்த எதிர்மனுதாரர்களின் வழக்கறிஞர் அவர்களுக்கு கொடுத்த Order 24 Rule 4 of CPC மனுவில் short cause title லில் எல்லா பிரதிவாதிகளின் பெயர்களையும், அவர்களின் வயதையும் குறிபிடப்பாமல் கொடுக்கப்பட்டுள்ளதால் மனு சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றும், மேலும் 4 ம் பிரதிவாதி 23.01.2026 ல் இறந்து விட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது ஆனால் அவரின் இறப்பு சான்றிதழ் எதுவும் மனுவுடன் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், எதிர்மனுதாரர்களும் எதிர்வழக்குரை தாக்கல் செய்தும் தங்களது கட்சியை எண்பிக்க வேண்டிய முக்கியமான எல்லா ஆவணங்களையும் தாக்கல் செய்து கட்சியை எண்பித்துள்ளார்கள் என்றும், மேலும் மனுதாரர் முறையாக மனு தாக்கல் செய்யாததால் மனு நிலைக்கத்தக்கது அல்ல. தள்ளுபடிக்கு அருகமானது எனவே மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யுமாறு குறிப்பிட்டுள்ளார்.

4. இருதரப்பிலும் சாட்சி மற்றும் சான்றாவணம் தாக்கல் இல்லை.

5. இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவெனில் மனுதாரர் தாக்கல் செய்துள்ள இந்த இடைமனு அனுமதிக்கதக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

6. இருதரப்பு வாதங்களையும் பரிசீலனை செய்து பார்க்கும்போது அசல் வழக்கானது விளம்புகை, சொத்து சுவாதீனம் மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரங்களுக்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கு நிலுவையில் இருக்கும்போது 4 ஆம் எதிர்மனுதாரர் ராமசாமி கடந்த 23.01.2026 அன்று கடந்த இறந்து விட்டதாகவும் இறந்த 4 ஆம் பிரதிவாதிக்கு 17 ம் எதிர்மனுதாரர் மனைவி மற்றும் 18,19, 20 எதிர்மனுதாரர்கள் முறையே மகன் மகள்கள் ஆவர் என்றும் இவர்களை தவிர வேறு வாரிசுகள் யாரும் இல்லை என்றும் இவர்கள்தான் இறந்த நான்காம் பிரதிவாதிக்கு சட்டப்படியான வாரிசுதாரர்கள் என்றும் இறந்த 4 ஆம் பிரதிவாதிக்கு இவ்வழக்கில் ஏற்படக் கூடிய லாபநஷ்டங்களில் பங்கு கொள்ளவும் வழக்கை தொடர்ந்து நடத்தவும் உரிமை உண்டு என்றும் எனவே இறந்த 4 ஆம் பிரதிவாதிக்கு முதல் எதிர்மனுதாரர்களை வாரிசுதாரர்களாக அங்கீகாரம் செய்து கொண்டும் முறையே அசல் வழக்கில் 17 முதல் 20 பிரதிவாதிகளாக சேர்த்துக் கொண்டும் மேல் உத்தரவு செய்ய இந்த இடைமனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது, இந்த 17 முதல் 20 எதிர்மனுதாரர்கள் அசல் மனுவில் அவசியமான தரப்பினர்கள் என்பதாலும், எதிர்மனுதாரர்கள் இம்மனுவிற்கு ஆட்சேபனை தாக்கல் செய்திருந்தபோதும், இம்மனுவை நிராகரிப்பதற்கான குறிப்பிட்டு எந்த காரணமும் சொல்லப்படவில்லை, அசல் மனுவில் அவசியமான தரப்பினர்கள் சேர்க்கப்படவில்லை என்றால் அதன் விளைவு எதிர்மனுதாரர்களுக்கே பாதகமான அமையும் என்பதால் இம்மனுவை அனுமதிப்பதே நீதியின் நலனுக்கு உகந்தது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

இறுதியாக, மனுதாரர் தாக்கல் செய்த இடைமனு செலவுத்தொகையின்றி அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, கணினியில் நேரடியான தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு பின்னர் இன்று 16.6.2026 ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(Sd/-E.Swetha)
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சிதம்பரம்.